# 2

# வேதாகமம், தேவனுடைய வார்த்தை

வேதாகமம் தேவனால் ஏவப்பட்டது என்று வலியுறுத்திக் கூறிக் கொள்ளுகிறது (2 தீமோ. 3:16, 17). "தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடரின் நேரடிப் பொருள், "தேவன் சுவாசித்தது" என்பதாகும். உலகப் பிரகாரமான எழுத்தாளர்கள் பலவகையான தூண்டுதல்களினால்- கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் உள்ளடங்கியவைகளினால்- "ஏவப்பட்டுள்ளனர்", ஆனால் வேதாகமத்திற்கு ஏவுதல் என்பதற்கு, தேவனே மூல காரணியாக இருக்கிறார் என்பதை வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது. அப்போஸ்தலரும், புதிய ஏற்பாட்டின் சில நூல்களை எழுதியவருமான பேதுரு, தீர்க்கதரிசனங்கள் "ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்'' (2 பேது. 1:21) என்று எழுதினார்.

ஏவப்பட்ட இந்தப் புத்தகத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதே இப்பாடத்தின் நோக்கமாகும். வேதாகமத்தின் தெய்வீக ஆரம்பம் பற்றிய சில ஆதாரங்கள் இங்கு தரப்படும், ஆனால் இந்த ஆச்சரியமான தொகுதியின்மேல் உங்களுக்கு ஒரு ஆர்வத்தை உண்டாக்குவது-அதன் மூலம் நீங்கள் இதை உங்களுக்காகவே படிக்கும்படி உற்சாகப்படுத்துவது - என்பதே இந்தப் பாடத்தின் அடிப்படை நோக்கமாகும். நீங்கள் வேதாகமத்தைப் படித்து, அதன்

நல்லொழுக்க விதிகளைப் (யாக். 1:21-25) பின்பற்றுகையில், இந்தத் தனிச் சிறப்புள்ள புத்தகமானது காலங்களினூடே மக்களின் மீது இப்படி ஒரு அழுத்தமான விளைவை ஏற்படுத்தியது ஏன் என்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்குவீர்கள்.

இந்தப் பாடமானது ஒரு எழுத்தாளர் கூறியபடி, “அதிசயமான வார்த்தையின் ஏழு அதிசயங்களை” தனிச் சிறப்புடன் காட்டுகின்றது: அவைகள் இதன் பழங்காலத் தன்மை, நவீனத் தன்மை, பல்வகைப் படுத்தும் தன்மை, ஒன்றாக்கும் தன்மை, மையக் கருத்து, செல்வாக்கு மற்றும் ஆறுதல் என்ற அதிசயங்களே. வரலாறு மற்றும் புவியியலில் இது மிகச் சரியாக இருத்தல் மற்றும் இதன் பாரபட்சம் இல்லாத தன்மை போன்ற வேதாகமத்தின் மற்ற அதிசயங்களையும் குறிப் பிடலாம், ஆனால் மேற்சொன்ன ஏழு அதிசயங்களே, சங்கீதங்களை எழுதியவர்களின் ஒரு எழுத்தாளரோடு நாமும் சேர்ந்து, “உம்முடைய சாட்சிகள் அதிசயமானவைகள்” (சங். 119:129அ) என்று நம்மை வியப்படையச் செய்வதற்குப் போதுமானவைகளாகும்.

## இதன் பழங்காலத் தன்மை

வேதாகமமானது உலக முழுவதிலும் உள்ள மிகவும் பழங்காலப் புத்தகங்களில் ஒன்றாக இருக்கிறது! புத்தகங்கள் பொதுவாக, பழைமையாவதற்கு வாய்ப்பில்லை. அவைகள் எளிதில் சிதையக் கூடியவையாய் இருக்கின்றன. அவைகளை நெருப்பு அழிக்கின்றது, தண்ணீர் அவைகளைக் கரைத்து விடுகின்றது. பூச்சிகள் அவற்றைத் தின்று விடுகின்றன, மற்றும் கவனமற்ற விரல்கள் அவற்றைக் கிழித்து விடுகின்றன.

வேதாகமமானது அதன் முழுமையடைந்த நிலையுடன் ஏறக் குறைய இரண்டாயிரம் வருடங்கள் பழமையானதாய் இருக்கிறது. அதன் சில பாகங்கள் இதைப் போல இரு மடங்கு பழமையான வையாகும். உலகத்தில் இருக்கிற வேறு எந்தப் புத்தகத்தையும் இதனோடு ஒப்பிட முடியாது! வேதாகமத்தின் இந்த பழமையான தன்மையே, அதன் நீடித்து நிற்கும் பண்பையும், அதனை அழிக்க முடியாத பண்பையும் வெளிப்படுத்துகின்றது.

மிகவும் பழங்காலத்தில் எழுதப்பட்டவைகள் பழைய ஏற் பாட்டில் இருக்கின்றன: ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம். இவைகள் மோசேயினால்

எழுதப்பட்டவைகள், இவைகளில் மனிதனின் ஆரம்பம் பற்றிய விபரங்களும், பதிவு செய்யப்பட்ட ஆரம்ப நாட்களைப் பற்றிய விபரமும் இருக்கின்றன. இன்றைய நாட்களில் மனிதன் வைத்திருக் கின்ற பழமையான, முழுமையான கையெழுத்துப் பிரதிகளில் இருந்து இவைகள் வந்துள்ளன என்று பாதுகாப்புடன் சொல்ல முடியும்!

வேதாகமத்தை அழிப்பதற்கு அடிக்கடியும், தொடர்ந்தும் மனிதன் மேற்கொண்ட கடினமான முயற்சிகளுக்கு அப்பால், வேதாகமம் இந்தப் பழமையான வயதை அடைந்திருக்கிறது! பூமியில் இருந்த மிகவும் வல்லமை வாய்ந்த அரசுகள், மறுபடியும் மறுபடியும் இந்தப் புத்தகத்தை வேருடன் அழிக்கத் தேடியதாக அறியப்பட்டுள்ளது. இதைப் படித்ததற்காக மனிதர்கள் தூக்கு மரத்தில் இறந்திருக்கின்றனர், இதை வைத்திருந்ததற்காக மனிதர்கள் கம்பத்தில் கட்டி வைக்கப் பட்டு எரிக்கப்பட்டிருக்கின்றனர். இதன் பக்கங்களைப் படித்ததற்காக விளக்கிக் கூற முடியாத மிகக் கொடூரமான உபத்திரவங்களை மனிதர்கள் பெற்றிருக்கின்றனர் - இருந்தாலும், பூமியில் இன்று எழுதப்பட்டுள்ள வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும், வேதா கமத்தின் பிரதிகளே அதிகமான அளவில் உள்ளன!

மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் ரோமாபுரி சக்கரவர்த்தியான டயோகிளேஷியன் என்பவன், வேதாகமத்தின் பிரதியொன்றை யாரேனும் சொந்தமாக வைத்திருந்தால், மரண தண்டனை தரப்படும் என்று கட்டளையிட்டான். மேலும் அவன் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருந்த சபை உறுப்பினர்களான (ஒரு கைதியின் வீட்டார்) எல்லாரையும் மரண தண்டனைக்குள்ளாக்கினான். இவ்விதமாக பலம் பொருந்திய அந்த ரோமன், தனது ஒழுக்கம் கெட்ட வாழ்க்கையையும், முரண்பாட்டையும் கண்டனம் செய்யும் எழுத் தாக்கங்கள் எல்லாவற்றையும் நீக்கிப் போடுவதற்குக் கொடூரமான வழிகளை மேற்கொண்டான். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு "கிறிஸ்தவ எழுத்துக்கள் எல்லாவற்றையும் இந்த உலகத்திலிருந்தே முழுவதுமாக அழித்து விட்டேன்'' என்று டயோகிளேஷியன் பெருமை பாராட்டிக் கொண்டான்.

இதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, கான்ஸ்டன்டைன் என்ற இன்னொரு ரோமச் சக்கரவர்த்தி, கிறிஸ்தவத்தின் மேல் ஈடுபாடு கொண்டு, தனது ஆளுகையின் கீழ் உள்ள பகுதிகளில் இருந்த சபைகள் எல்லாவற்றிற்கும் புதிய ஏற்பாட்டின் பிரதிகள் தயார் செய்து கொடுக்கும்படி விரும்பினான். தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய

இந்நூலைக் கண்டுபிடித்து, தனது அலுவலர்களிடம் கொடுப்பவர் களுக்கு பெருமதிப்புள்ள வெகுமதி வழங்கப்படும் என்று கூறினான். இருபத்து நான்கு மணி நேரத்திற்குள், - டயோகிளேஷியன் தான் எல்லாவற்றையும் அழித்து விட்டதாக எண்ணியதற்கு மாறாக-வேத வசனங்களின் ஐம்பது பிரதிகள் இந்தச் சக்கரவர்த்தியிடம் தரப்பட்டன.

அழியக் கூடிய பொருட்களின் மேல், அழிந்து விடக் கூடிய மையினால் எழுதப்பட்டிருந்தாலும் - காலம், இயற்கையின் சக்திகள், மனிதனின் அழிக்கும் சூழ்ச்சிகள் ஆகிய இந்த நாச சக்திகள் எல்லா வற்றையும் மீறி - நமது இந்த நூற்றாண்டிலும் வேதாகமம் நிலைத்து வாழ்கின்றது. இதன் நீண்ட மற்றும் பழமையான வரலாற்றுக்கு தேவனுடைய அருள் இரக்கமே காரணமாகும்.

## இதன் நவீனத் தன்மை

வேதாகமம் பழமையானதாய் இருப்பதைப் போலவே, அநேக விதங்களில் ஒரு நவீனமான புத்தகமாகவும் இருக்கிறது. பழைய புத்தகங்களின் உபதேசங்களில் இன்றைய காலத்திற்கேற்ற போக்கு இருப்பதை நாம் எதிர்பார்ப்பதில்லை. பத்து வருடங்கள் பழமையான ஒரு அறிவியல் புத்தகம் வழக்கற்றுப் போய் விடுகிறது. நூறு ஆண்டுகள் பழமையானது, அறிந்து கொள்ளும் ஆர்வமுடையதாகிவிடுகிறது. சல்மோனின் கருவியல் ஆய்வு என்ற 1700ம் வருடம் அச்சிடப்பட்ட புத்தகத்தில் உள்ள மருத்துவ விபரங்கள் நவீன மருத்துவரை பயங்கரமாய் சிரிக்கச் செய்யும். 1600ம் வருடத்துப் புத்தகமான லன்டென்சிஸ் மருந்து விபரங்கள் என்பதில் உள்ளவை இதைக் காட்டிலும் முட்டாள்தனமானதாகக் காணப்படுகின்றன; அந்தப் புகழ்பெற்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளபடி இன்று ஒரு மருத்துவர் நோயாளிகளுக்கு சிகிச்சை தருவாரேயானால், அந்த மருத்துவரை சிறைச் சாலையில் அடைத்து விடுவார்கள்!

சில ஆண்டுகள் கூட எவ்வளவு மாறுபாட்டை உண்டாக்க முடியும் என்பதை விளக்குவதற்கு, 150 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான தாவரவியல் பாடப் புத்தகத்தில் உள்ள ஒரு கூற்று இங்கு தரப்படுகிறது:

இத்தாலியில் ஒரு மூலிகைச் செடி வளருகின்றது … அது வெள்ளை இதழ்களும் அரிய வாசனையும் கொண்ட பூக்களை உடையதாய் இருக்கிறது. இருப்பினும் அந்தத் தாவரம் பின்வரும் அதிசயமான குணமுள்ளதாகும்: அந்த பூக்களை ஈரமான கல்லுகளுக்கு அடியில் பத்து நாட்கள் வைத்திருந்தால், அவைகள் அந்தப் பத்து நாட்களில், கடித்தவுடன் மரணம் ஏற்படுத்தும் கொடிய விஷத் தேள்களாகி விடுகின்றன.

ஒருவேளை நீங்கள், "கொஞ்சம் நியாயமாய்ப் பேசுங்கள், போன ஒன்றரை நூற்றாண்டில் நாம் எவ்வளவோ விஷயங்களைக் கற்றுக் கொண்டு இருக்கிறோமே. பழைய புத்தகங்கள் இன்றைய காலத்திற்கு ஏற்றது போல் இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாதே!" என்று சொல்லலாம். கருத்து அதேதான்! உதாரணமாக, மோசே 3500 வருடங்களுக்கு முன்பாக எழுதியவைகள் கூட, தற்கால அறிவியல் மற்றும் அறிவு ஆகியவைகளுக்கு முரண்பாடாயிருப்பதாக நீங்கள் பார்ப்பது இல்லை. முழுவதும் "வேதாகம விஞ்ஞான முன்னறி வின்படி" எழுதப்பட்டுள்ள புத்தகங்களில், வானசாஸ்திரம் மற்றும் பிரபஞ்ச சாஸ்திரம் மற்றும் பிற விஞ்ஞானத் துறைகளின் தற்கால உண்மைகளை வேதாகம புத்தகத்தின் பக்கங்களில் காண முடியும் என்று வலியுறுத்தப்படுகின்றது. பின் காணும் உண்மைகள் முதலியவை அடங்கியுள்ளன:

பூமி உருண்டையாக இருக்கிறது (ஏசா. 40:22; நீதி. 8:27).
பூமி அந்தரத்தில் தொங்க வைக்கப்பட்டுள்ளது (யோபு 26:7).
வானவெளியானது அளவிட முடியாத அளவு பெரியது, நட்சத்திரங்களை எண்ண முடியாது (ஆதி. 15:5; எரே. 33:22).
பெரும் கடல்கள், அவைகளில் இயற்கையான வழிகளை கொண்டுள்ளன (இந்நாட்களில் கப்பல் பயணத்திற்கு அவ்வழிகள் பயன்படுகின்றன) (சங். 8:8; சங். 77:19).

வேதாகமம் என்பது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிப் புத்தகம் என்று இந்தத் தொகுப்புகள் உறுதிப்படுத்துவதில்லை. மாறாக, வேதாகம எழுத்தாளர்கள் விஞ்ஞானத் தொடர்புடைய கொள்கைகளைத் தொடும் பொழுது, அவர்களின் நாட்களில் இருந்த மற்ற எழுத்தாளர் களைப் போல இல்லாமல், அவர்கள் விஞ்ஞான உண்மைகளுக்கு முரண்பட்டதே இல்லை.

வேதாகமத்தின் காலத்தை வெல்லும் தன்மைக்கான வசீகரமான சில விளக்கங்கள் அதில் உள்ள சில மருத்துவத் துறைக்கான பகுதிகளில் இருக்கின்றன. நவீன சுகாதாரம் அல்லது நல்வாழ்விற்கான நடை முறைகள் எதுவும் அறியப்படாத காலத்தில் எழுதப்பட்ட மோசேயின் பிரமாணத்தில் சுத்தம், சுகாதாரம், நோயாளிகளை ஒதுக்கி வைத்தல், மற்றும் வியாதிகள் பரவாமல் தடை செய்யும் பிற முறைமைகள், வியாதி வராமலிருக்க எடுக்கும் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய அறிவுரைகளை மோசே பதிவு செய்துள்ளார்.

உதாரணமாக, அறுவைச் சிகிச்சை செய்பவர், தனது முகத்தில் ஒரு முகமூடியை அணிந்து கொள்வது நடைமுறையில் மாறாத ஒரு பழக்கமாய் இருக்கிறது. மேலும், சந்தேகத்திற்கிடமான நோய் உள்ள ஒருவர் இருக்கும் அறையில் நுழைபவர் ஒரு முகமூடியை அணிந்து செல்வது வழக்கம். ஏன்? ஏனென்றால் நோய்க் கிருமிகள் தனது உடலில் நுழைவதை அவர் விரும்புவதில்லை. அறிவியல் அறிஞர்கள் நோய்க் கிருமிகளைக் கண்டு பிடிப்பதற்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே, தேவன் மோசேயின் மூலம் பின்வரும் அறிவுரைகளைக் கொடுத்திருந்தார்: “அந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி,… தன் தாடியை மூடிக் கொண்டு, ‘தீட்டு, தீட்டு’ என்று சத்தமிட வேண்டும்” (லேவி. 13:45).

இரத்த தானம் செய்தல் (இரத்தத்தை ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு மாற்றிச் செலுத்துதல்) என்பது மருத்துவத் துறையில் இன்னொரு முன்னேற்றமாகும். அநேக வருடங்களுக்கு முன்னால் மக்களை “இரத்தம்” வெளியேற வைப்பது என்பது மிகச் சிறந்த மருத்துவ முறையாகக் கருதப்பட்டது; இதனால் அநேகர் இறந்துவிடும் வகையில் இரத்தம் சிந்தினர். ஆயினும், இன்றைய நாட்களில் இரத்தமே உடலின் உயிரோட்டமாக இருப்பது புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது, ஆதி. 9:4ல் மோசேயின் கூற்றுக்குத் திரும்புங்கள்: “மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம்.” வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்றே மோசே சொல்லியிருக்கிறார் (லேவி. 17:11-14 லிலும் காணவும்).

வேதாகமத்தின் மிகச் சரியான மருத்துவ விபரங்களுக்கு, புத்தகங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இவைகளில் பரவலான அளவிற்கு மருத்துவ நடைமுறைகள் இருக்கின்றன. கீழே சில உதாரணங்கள் இருக்கின்றன:

*ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு வகைப்பட்டவர்களும், உயிரின் "வித்து" உள்ளவர்களாய் இருக்கின்றனர் (ஆதி. 3:15; 22:18).*

*இறந்துபோன மனிதன் அல்லது மிருகத்தை நீங்கள் தொட்டிருந்தால், அதன் பிறகு நீங்கள் குளித்து, நீங்கள் அணிந்திருந்த உடைகளைத் துவைத்து அதன் மூலம் கிருமிகளைப் போக்குவது ஞானமுள்ள செயல் ஆகும் (எண். 19:5-22).*

*தானாகவே இறந்துபோன விலங்கை உண்ணுவது அபாயமானதாகும் (லேவி. 17:15).*

*இது பெரும் வியப்பாயிருக்கிறதல்லவா? நாம் வைத்துள்ளதிலேயே மிகவும் பழமையான புத்தகத் தொகுப்பில் இருபத்தியோராம் நூற்றாண்டின் மருத்துவக் கொள்கைகள் இருக்கின்றனவே!*

வேதாகமத்தின் நவீனத் தன்மையை, அதன் பல்வேறு பாடக் கருத்துக்களைக் கொண்டு விளக்கிக் கூற முடியும். இந்த புத்தகத்தின் ஒழுக்க நெறிகளுக்கு மேலாக இந்த உலகம் பக்குவப்பட்டு இருக்கிறது என்று நீங்கள் சொல்லிக் கொள்ள முடியுமா? இதனுடைய கொள்கைகளை விட மேம்பட்ட மேலான அறிவு எதையும் நாம் பார்த்திருக்கிறோமா? இல்லை! தற்கால மனிதன் வேதாகமத்தின் ஞானத்திற்கு அப்பால் கடந்து செல்லவில்லை; உலகமானது இன்னும் ஒரு ஆயிரம் வருடங்களுக்கு இருந்தாலும், இருபத்தியோராம் நூற்றாண்டில் இருப்பதைப் போலவே தேவனுடைய வசனமானது இருபத்தியிரண்டாம் நூற்றாண்டிலும் காலத்திற்கு ஏற்றதாகவே இருக்கும்!

## இதன் பல்வகைப்படுத்தும் தன்மை

இதுவரையில் நாம் சொல்லியவைகள் எல்லாம், வேதாகமம் ஒரே புத்தகமாக இருந்து, எவ்விதம் ஒரே கருத்தை கொண்டதாகவும் இருக்கிறது என்று நம்மை பிரமிக்கச் செய்யப் போதுமானவைகளாகும். இருந்தாலும் இது மட்டுமே இதன் தன்மையாக இருப்பதில்லை.

வேதாகமம் என்பது இந்த உலகத்திலேயே மிகவும் பல் வகைப்பட்ட தன்மை கொண்ட புத்தகம் ஆகும். முதலாவதாக, இது உண்மையில்-பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் என்ற-ஒன்றில் இருந்து

ஒன்று நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகள் வேறுபாடு கொண்ட இரண்டு தொகுதிகளைக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, இந்தத் தொகுதிகள் ஒவ்வொன்றும் மேலும் பல எண்ணிக்கையுள்ள புத்தகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது - பழைய ஏற்பாட்டில் முப்பத்தி ஒன்பதும், புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஏழும் ஆக மொத்தம் அறுபத்தி ஆறு புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவதாக, இந்த அறுபத்தி ஆறு புத்தகங்களும் நாற்பதுக்கும் மேற்பட்ட வித்தியாசமான எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. நான்காவது, இந்த நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்தவர்களாய் இருந்தனர்! நிறைவாக, இவைகளை எழுதியவர்கள் இலக்கியம் அறிந்துள்ள ஒவ்வொரு பாடக் கருத்தைப் பற்றியும், கூடுதலாக ஒன்றையும் எழுதியிருக்கிறார்கள். இந்தக் கூடுதலாக ஒன்று என்பது உண்மையான தீர்க்கதரிசனம் ஆகும். இது தேவனுக்கு மட்டுமே உரியதான பகுதியாக இருக்கிறது! வேதாகமத்தில் இருக்கும் நூற்றுக் கணக்கான தீர்க்கதரிசனக் கூற்றுக் கள் முழுமையாகவும், மிகவும் சரியாகவும் நிறைவேறியிருக்கின்றன. இங்கு அவைகளில் சிலவற்றை மட்டுமே தருவதற்கு இடம் உள்ளது:

> *நாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்: நாடுகளின் எழுச்சி, சரிவு மற்றும் வீழ்ச்சி ஆகியவைகளைப் பற்றி எண்ணிக்கையில் அதிகமான தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டன. உதாரண மாக, உபா. 28:47-68ல் இஸ்ரவேலரின் வரலாறு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப் பட்டது. அசீரியா (ஏசா. 10:12, 24, 25; 2 இரா. 17:24; 18:13 ஆகியவற்றைக் காணவும்) மற்றும் பாபிலோன் (ஏசா. 13; தானி. 5:28 ஆகியவைகளைக் காணவும்) உட்பட மற்றும் பல நாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் கொடுக்கப்பட்டன.*

> *மக்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்: யோசியா அரசனின் வேலைகள், அந்த அரசன் பிறப்பதற்கு சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டன (1 இரா. 13:2; 2 இரா. 23:15, 16), இதே போல், பெர்சியா நாட்டின் இராஜாவாகிய கோரேஸைப் பற்றியும் முன்னுரைக்கப்பட்டது (ஏசா. 44:28; 45:1ஐக் காணவும்). சனகெரிப் என்பவன் எருசலேமைக் கைப்பற்ற முடியாமல் போவது பற்றிய ஆச்சரியமான வரலாறு முன்னுரைக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும் (2 இரா. 19:32-35ஐக் காணவும்).*

*கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கசரிசனங்கள்: பழைய ஏற்பாட்டில் இருக்கும் சுமார் எண்ணூறு தீர்க்கதரிசனங்களில், முன்னூறுக் கும் மேற்பட்டவை இயேசு கிறிஸ்துவின் தன்மையை மையமாகக் கொண்டவையாகும். இப்புத்தகத்தின் 4வது பாடத்தில் இந்தத் தீர்க்கதரிசனங்களில் பலவும், அவை எவ்விதம் நிறைவேறின என்பதும் பட்டியலிடப்பட்டுள்ளன.*

வேதாகமத்தின் பல்வகைப்படுத்தும் தன்மையானது, இது தேவனிடத்தில் இருந்து வந்தது என்பதை நிரூபிக்கின்றது. இந்தப் பல்வகைப் படுத்தும் தன்மையிலும் ஒருமைப்பாடு இருப்பதால் இது விசேஷமான உண்மையாகின்றது. வேதாகமத்தில் உள்ள புத்தகங் களில் மனித வாழ்க்கையின் எந்த ஒரு பாகமும் அல்லது ஆவிக்குரிய நிலையும் கவனிக்கப்படாமல் விடப்படவில்லை. கொள்கையிலும், தெய்வீக வழி நடத்துதலிலும் இது மனித வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் தொட்டிருக்கின்றது.

## இதன் ஒன்றாக்கும் தன்மை

வேதாகமம் என்பது ஒரே எழுத்தாளரால் எழுதப்பட்ட ஒரே புத்தகமாக இருந்தால், அதன் பகுதிகள் எல்லாம் ஒத்திசைவு பெற்றி ருப்பதை நாம் இயல்பாகவே எதிர்பார்க்கலாம். நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் எழுதிய ஒரே பாடக் கருத்தைப் பற்றிய ஒரே புத்தகமாக இருந்தாலும், முழுமையான ஒத்திசைவுக்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே இருக்கும். ஆகவே, நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் பல்வேறுபட்ட பாடக் கருத்துக்களை அறுபத்தி ஆறு புத்தகங்களாக எழுதியிருந்தும், அவர்களின் வார்த்தைகளில் உள்ள ஒத்திசைவு நம்மைத் திகைக்க வைக்கிறது. “அவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, இப்படிக் குறிப்பிடத்தக்க சிறப்புள்ள ஒரு வேலைக்காக நெருங்கியிருந்து மிகவும் கவனமாக இந்த வேலையைச் செய்திருக்கலாம்” என்று யாரேனும் ஒருவர் சொல்லலாம்! ஆனால் இப்படி நடந்திருக்கவில்லை என்று வரலாறு நிரூபிக்கின்றது. இந்த மனிதர்களில் பலர் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டதே யில்லை. இவர்கள் பல நூற்றாண்டுக் காலங்கள் முன் பின்னாகப் பிரிந்திருந்தனர், எனவே ஒன்று கூடி தங்கள் எழுத்துக்களைத் திட்டமிடவோ அல்லது மறு கண்ணோட்டம் பார்க்கவோ இவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதன் ஒத்திசைவு என்பது

வேறு வழியில்தான் விளக்கப்பட வேண்டும்.

உண்மையானது மறுக்கப்பட முடியாததாக இருக்கிறது: வேதவசனங்களை எழுதியவர்களுக்கும், அவர்கள் எழுதிய எல்லா பாகங்களுக்கும் இடையில் ஒரு முழுமையான ஒருமைப்பாடு இருக்கின்றது. இந்த எழுத்துக்களில் ஏதேனும் ஒரு கருத்து வேறுபாடாவது இருக்காதா என்று பார்க்க மனிதர்கள் முயற்சி செய்து, அதில் தோல்வியையே பெற்றிருக்கின்றார்கள். வேதாகமம் என்பது ஒன்றிணைந்த முழுமையானதான ஒரு புத்தகமாக இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக இதன் முக்கியமான இரண்டு பகுதிகளாகிய பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றைக் கவனியுங்கள். அவை இரண்டும், இரண்டு தனித்தனிக் குழுவான மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இரண்டு தனித்தனியான உடன்படிக்கைகளாக (அல்லது ஒப்பந்தங்களாக) இருந்த போதிலும், அவை இரண்டும் அழகாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. "பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்துள்ளது, புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது" என்று யாரோ ஒருவர் சொன்னார். பழைய ஏற்பாடு வேர் என்றால், புதிய ஏற்பாடு கனி ஆகும்.

வேதாகமத்தின் முதல் புத்தகத்திற்கும், வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்திற்கும் இடையில் இருக்கின்ற சில வேறுபடும் ஒப்புவமை களைக் குறிப்பிடுவோம்:

(1) வானமும் பூமியும் படைக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டு ஆதியாகமம் தொடங்குகின்றது; புதிய வானமும் புதிய பூமியும் படைக்கப்படும் என்று வெளிப்படுத்தின விசேஷம் முடிகின்றது.

(2) வெளிச்சம் வந்ததைப் பற்றியும், சூரியன் மற்றும் சந்திரன் ஆகியவை படைக்கப்பட்டதைப் பற்றியும் ஆதியாகமம் விவரிக் கின்றது; இவைகள் மனிதனுக்குச் செய்யும் வேலை முடிவடைதலை வெளிப்படுத்தின விசேஷம் சொல்லுகின்றது- ஏனெனில் புதிய நகரத்தில் (பரலோகத்தில்), தேவனும், ஆட்டுக்குட்டியானவருமே (இயேசு) வெளிச்சமாய் இருப்பார்கள்.

(3)ஆதியாகமத்தில், மனிதன் சாத்தானைச் சந்திக்கிறான், சாத்தானிடம் மனிதன் தோல்வியடைகின்றான். வெளிப்படுத்தின விசேஷத்தில், இன்னொரு யுத்தம் நடக்கின்றது; இதில், சாத்தான் தோல்வியடைகின்றான், இயேசுவின் மூலமாக மனிதன் வெற்றி யடைகின்றான்.

(4) ஆதியாகமத்தில் முதல் ஆணும் பெண்ணும் வாழ்ந்திருந்த

இடமாகிய ஏதேன் தோட்டத்தில் இருந்து மனிதன் வெளியே துரத்தி விடப்படுகின்றான். வெளிப்படுத்தின விசேஷத்தில் மனிதன் தேவனுடன் மறுபடியும் இணைக்கப்படுகிறான்.

*(5) நிறைவாக, ஆதியாகமத்தில், மனிதன் எப்படி ஜீவ மரத்தின் கனியை உண்ணும் பாக்கியத்தை இழந்து போனான் என்று சொல்லப்படுகின்றது அவன் அதையும் சாப்பிட்டிருந்தால் பாவம் என்பது என்றென்றும் அழிக்க முடியாததாக ஆகியிருந்திருக்கும். வெளிப்படுத்தின விசேஷத்தில், பாவம் அழிக்கப்பட்டு, மனிதன் என்றென்றும் வாழ்வதற்காக ஜீவ மரத்தின் கனியைச் சாப்பிடுவதற்கு அழைக்கப்படுகின்றான்!*

ஆம், இந்தப் புத்தகத்தின் (வேதாகமத்தின்) ஒன்றாக்கும் தன்மை ஆச்சரியமாக இருக்கின்றது. இதன் ஒருமைப்பாட்டை நாம் பார்க்கும் போது, நாம் பிரமித்து நின்று தேவனே இதனை எழுதியவர் என்று முடிவு செய்கின்றோம்.

## இதன் மையக் கருத்து

வேதாகமத்தின் பொருளடக்கங்களைத் தொகுப்பதில், ஒரே சிந்தனையின் மேற்பார்வையிருந்திருந்தால் மட்டுமே இதன் ஒன்றாக்கும் தன்மை சாத்தியமாகும். இந்த இலக்கியச் செயல்பாடு நிகழ்ந்த கால இடைவெளியாகிய ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வருடங்களில் எந்த ஒரு மனித எழுத்தாளரும் இவ்வளவு அதிகமான ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்க முடியாது என்பதால், தேவனே இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் என்று அழைப்பதே சரியானதாகும். பேதுரு இதை மனதில் வைத்துக் கொண்டுதான், *"தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேது. 1:21ஆ)* என்று சொன்னார்.

மறுபடியுமாக, இந்த ஒன்றிணைக்கும் தன்மைக்கு ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல, ஒரே மையக் கருத்தும் கூட தேவையாய் இருக்கின்றது - இவை எல்லாவற்றையும் ஒன்று கூட்டுவதற்கு இது தேவையாயிருக்கின்றது. இந்தப் புத்தகத்தின் மையக் கருத்து என்ன? மனித குலமானது இந்த மையக் கருத்துக்கான காரணங்களைக் கொடுத்திருந்தாலும், "மனித குலத்தின் வரலாறு" என்பது இந்தப் புத்தகத்தின் மையக் கருத்தாக இருப்பதில்லை. இந்த மையக் கருத்துக்கான மிக முக்கியமான வேலைகளை யூதர்கள் நிறைவேற்றி

யிருந்தாலும், "யூதர்களின் வரலாறு" என்பது இதன் மையக் கருத்தாக இருப்பதில்லை. ஒரு மனிதராகிய - இயேசு கிறிஸ்து என்ற "ஒரு மனிதரின் வரலாறு" என்பதே இந்தப் புத்தகத்தின் மையக் கருத்து ஆகும்.

வரப்போகின்ற ஒருவரைச் சுற்றியே வேதாகமம் சுழன்றது என்பது ஒரு நல்ல கூற்று ஆகும். "அவர் வருகின்றார்" என்பதே பழைய ஏற்பாட்டின் செய்தியாகும். "அவர் இங்கு இருக்கின்றார்" என்பதே நற்செய்தி புத்தகங்களின் செய்தியாகும். "அவர் மறுபடியும் வருகின்றார்" என்பதே புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள பகுதியின் மையக் கருத்தாகும்.

வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் இயேசுவை எவ்விதம் வெளிப்படுத்துகிறது என்ற நிலைப்பாட்டைப் பற்றிய படிப்பானது மிகுந்த ஆர்வமுடையதான ஒரு படிப்பாக இருக்கின்றது. "ஆதியா கமத்தில் இயேசு", "யாத்திராகமத்தில் இயேசு", "லேவியராகமத்தில் இயேசு" என்பது போன்ற புத்தகங்கள் எழுதப்பட முடியும். எடுத்துக் காட்டாக:

ஆதியாகமம் 1ல் இயேசு இருக்கின்றார், ஏனெனில் "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" (யோவா. 1:3அ).

ஆதியாகமம் 3ல் இயேசு இருக்கின்றார், ஏனெனில், அவரே பின்னாளில் சாத்தானுடைய தலையை நசுக்குகின்ற "ஸ்திரீயின் வித்தாக" ஆனார் (ஆதி. 3:15; கலா. 3:16).

ஆதி. 4ல் இயேசு இருக்கின்றார், ஏனெனில் ஆபேல் செலுத்திய ஆட்டுக்குட்டியின் பலியில் அவர் முன்நிழலிடப்படுகின்றார் (எபி. 12:24ஐக் காணவும்).

ஆதியாகமம் 6லும் இயேசு இருக்கின்றார், ஏனெனில் பேழைக்குள் உண்டான இரட்சிப்பு என்பது அவருக்குள், அவர் மூலமாகக் கிடைக்கும் இரட்சிப்பின் அடையாளமாக இருந்தது. இவ்வாறு நாம் மேன்மேலும் கூறிக் கொண்டே போக முடியும்.

எனவே இயேசு கிறிஸ்து என்ற மையக் கருத்துதான் தேவனுடைய வசனங்களுக்கு ஆச்சரியமான ஒருமைப்பாட்டைத் தருகின்றது. இயேசு-அவரே வரப்போகிற இரட்சகராய் இருந்தார்,அந்த இரட்சகர் வந்தார், அந்த அரசர் மறுபடியும் வருகிறவராய் இருக்கிறார்-இந்தக் கருத்துதான் அறுபத்தி ஆறு புத்தகங்களின் வசனங்களையும் ஒன்றிணைந்த ஒரே பதிவாக ஆக்குகின்றது.

## இதன் செல்வாக்கு

பூமியின் நூலகங்களில் உள்ள எழுதப்பட்ட எல்லா புத்தகங்களை விடவும், வேதாகமமானது மனித குலத்தின்மேல் மிகவும் வல்லமையான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. இது வரலாற்றின் ஓட்டங்களை மாற்றியுள்ளது, சக்கரவர்த்திகளை ஏற்படுத்தியுள்ளது, வெற்றியாளர்களையும் அரசர்களையும் கீழே தள்ளியுள்ளது. இதன் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிபவர்களை ஆசீர்வாதங்களினாலும், வெற்றிகளினாலும் நிரப்பியுள்ளது, இதற்கு எதிராகப் போராடுபவர்களுக்கு மரணத்தையும் அழிவையும் கொண்டு வந்திருக்கிறது. வேதாகமத்தின் வல்லமைகள் அநேகமாயும், பலவகைப்பட்டதாயும் இருக்கின்றன, ஆனால் வாழ்க்கையை மாற்றி, மனிதர்களை உயர்த்தும் இதன் வல்லமையை மட்டும் நாம் கவனிப்போம்.

பல வருடங்களுக்கு முன் தீவுகளின் கூட்டம் ஒன்றில் காட்டுமிராண்டி இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு கூட்டமாக வாழ்ந்தனர். ஜூலியஸ் சீசரின் படைகளுடைய பதிவேட்டில், இந்தக் காட்டுமிராண்டிகள் ஒரு யுத்தத்திற்கு நிர்வாணமாகச் சென்றதைப் பற்றியும், அதில் பெற்ற வெற்றியைக் கொண்டாடும்போது அந்தக் காட்டுமிராண்டிகள், தாங்கள் கொலை செய்த பகைவரது உடலில் இருந்த இரத்தத்தை ஒரு காலியான மண்டை ஓட்டில் எடுத்துக் குடித்ததாகவும் வரைபடமாகத் தரப்பட்டுள்ளது. துரூயித்ஸ் என்ற மந்திரவாதியின் பலிபீடத்தின் மேல் மனிதர்களைப் பலியாகக் கொடுப்பது வழக்கமானதாயிருந்தது. பிறகு சில சம்பவித்தன. சுவிசேஷ செய்தியாளர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து இந்தக் காட்டு இனத்தவருக்கு தேவனுடைய வசனத்தை எடுத்துச் சென்றனர், அந்த நாட்டவர் அதை ஏற்றுக் கொண்டனர். சில காலங்களுக்குப் பிறகு, இந்த மக்கள் மகா அலெக்ஸாந்தரைக் காட்டிலும் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை ஆள்பவர்களாக வந்தனர்-இந்தத் தீவுகள் பிரிட்டிஷ் தீவுகள் ஆகும்!

வேதாகமம் எங்கெல்லாம் சென்றதோ, அங்கெல்லாம் மனிதகுலம் மேம்பாடு அடைந்திருக்கின்றது. வேதாகமத்திலேயே வாழ்க்கையின் மாற்றங்கள் பற்றிய அநேக வரலாறுகள் உள்ளன. நேர்மையற்ற ஒரு ஆயக்காரன், நேர்மையானவனாகவும், பெருந்தன்மை உடையவனாகவும் ஆனான் (லூக். 19:1-9). தேவதூஷணம் சொல்லிய ஒரு கொலைகாரன் மாபெரும் அப்போஸ்தலராக ஆனான் (அப். 7:58; 8:1,

3; 22:4-21). இன்னும் பல எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

வேதாகமத்தின் வல்லமையினால் தேவன் மற்றவர்களுக்கு என்ன செய்திருக்கிறாரோ, அதை அவர் உங்கள் வாழ்க்கையிலும் நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார். நீங்கள் அவரது வசனத்தைப் படித்து, அதன்படி வாழ்ந்தால், அவர் உங்களைத் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றுவார்.

## இதன் ஆறுதல்

மனிதனுக்குச் செய்கின்ற மற்ற எல்லாப் பணிகளையும் போலவே, ஆறுதல் தருவதிலும் வேதாகமம் தனிச் சிறப்புள்ளதாக, இதற்கு முன் எதுவும் அற்றதாக, இணையற்றதாக இருக்கின்றது! கல்லறைக்கு (மரணத்திற்கு)ப் பின்னால் உள்ளவைகளை மனிதன் பார்க்கச் செய்யக்கூடிய மிக நம்பிக்கையுடைய வெளிச்சமான ஒன்று இதற்கு முன்னால் இதைப் போல இருந்ததில்லை, இதற்குப் பின்னாலும் இதைப் போன்ற ஒன்று எப்பொழுதும் ஏற்படப் போவதும் இல்லை! வேதவசனங்களைப் படிப்பவர்களுக்கு அவர்கள் சென்றடையக் கூடிய நித்தியத்தின் உறுதியைப் பற்றிய நம்பிக்கையை அவைகள் தருகின்றன, மேலும் தங்களுக்கு அன்பானவர்கள் மரணத்தினால் எடுத்துக் கொள்ளப்படும்போது இவைகள் அவர்களுடைய இருதயங்களுக்கு ஆறுதலைத் தருகின்றன.

மரணம் என்பது ஒரு விரோதியாகவே இருக்கின்றது. இந்த இரக்க மற்ற, துன்பம் நிறைந்த உண்மையை மனிதனால் உண்டாக்கப்பட்ட கவிதைகள் மற்றும் தத்துவங்கள் எதுவும் எப்பொழுதும் மாற்ற முடியாது. கிறிஸ்தவர்களுக்கோ இந்த விரோதியின் தோல்வியானது முன் தீர்மானிக்கப்பட்டதாய் இருக்கின்றது. கிறிஸ்துவின் வல்லமையினால், இந்த மரணமானது இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தருக்கு முன்பாகப் பிரசன்னமாவதற்கு அழைத்துச் செல்லும் பணியைச் செய்ய உந்தப்படுகின்றது. இருந்த போதிலும், அது ஒரு விரோதியாகவே இருக்கின்றது! இந்த விரோதி அரண்மனைகளிலும் குடிசைகளிலும் ஒரே மாதிரியாகவே நுழைகின்றது. இது ஒரு கணவரை அவரது மனைவியிடம் இருந்து பிரிக்கின்றது. இது ஒரு தாயின் கைகளில் இருந்து சிறு குழந்தையைப் பறிக்கின்றது. இது இனிமையான மகிழ்ச்சியை இருளான வருத்தமாக்குகின்றது.

அன்புக்குரியவர்கள் இறக்கும்போது, மக்கள், “எங்களை ஆறுதல்

படுத்தும் சில வார்த்தைகளைச் சொல்லுங்கள்" என்று வேண்டிக் கேட்கின்றார்கள். இந்த வார்த்தைகள் எங்கிருந்து வரும்? இலக்கியத்தில் இருந்தா? ஒரு கவிதையில் இருந்தா? ஒரு தத்துவ ஞானியிடம் இருந்தா? மரணம் உங்கள் வீட்டை அடித்து வீழ்த்தும்போது உங்களிடம் இருக்கின்ற மாபெரும் புத்தகங்களை நீங்கள் தேடிப்பார்த்தாலும், அழிந்து போகின்ற மனிதனால் எழுதப்பட்ட எந்த ஒரு வரியிலாவது, உங்களால் அழியாத ஆறுதலையும் நம்பிக்கையையும் கண்டடையவே முடியாது. பலமும் ஆறுதலும் தரும் வார்த்தைகளுக்கு ஒரே ஒரு பிறப்பிடம்தான் உள்ளது: வேதாகமம். தேவனுடைய புத்தகத்தில் மட்டுமே நீங்கள் பின்வருவது போன்ற வார்த்தைகளைப் படிக்க முடியும்:

> நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் (சங். 23:4).
>
> கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் … அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும் (1 கொரி. 15:20-54).
>
> பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை யொருவர் தேற்றுங்கள் (1 தெச. 4:17, 18).
>
> அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது (வெளி. 21:4).

காலங்களினூடாக இந்த வார்த்தைகள்-மற்றும் வேதாகமத்தில் இதைப் போல இருக்கின்ற பிற வார்த்தைகள்-கண்ணீர்களைக் காய வைத்திருக்கின்றன, நம்பிக்கை கொடுத்திருக்கின்றன, மற்றும்

இலட்சக்கணக்கானவர்களுக்கு ஆறுதலைக் கொண்டு வந்திருக்கின்றன. இது ஒரு அற்புதமான புத்தகமாகவே இருக்கின்றது!

## முடிவுரை

வேதாகமத்தின் ஏழு அதிசயங்களை நாம் கவனித்துப் பார்த்தோம்: அது பழையது, ஆனாலும் என்றும் புதியது! இது பல்வகைப்பட்டது, ஆனால் முழுமையான ஒருமைப்பாடுள்ளது-அந்த ஒருமைப்பாடு இயேசுவையே மையமாகக் கொண்டுள்ளது! இது தனது செல்வாக்கில் வல்லமையுள்ளது, ஆனால் ஆறுதல் தருவதில் மென்மையானது! வேதாகமம் என்பது தேவனால் ஏவப்பட்ட வார்த்தையாகும்; இதைவிடப் போதுமான விளக்கம் வேறு எதுவுமே இல்லை.

## பாட வினாக்கள்

*(விடைகள் 304 ம் பக்கங்களில்)*

1. "தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று 2 தீமோ. 3:16ல் கூறப்படுவதன் பொருள் என்ன?
2. ரோமச் சக்கரவர்த்தியாயிருந்த டயோக்கிளேஷியன் வேதாகமத்தையும் அதன் செய்தியையும் நீக்கிவிட முயற்சி செய்தான். அதில் அவன் வெற்றியடைந்தானா?
3. லேவி. 13:45ல் வேதாகமத்தின் சரியான பண்பு காண்பிக்கப்படுவது எப்படி?
4. வேதாகமத்திற்குள்ளாகவே உள்ள வித்தியாசங்கள் எவ்விதம் இது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை நிரூபிக்கின்றன?
5. வேதாகமத்தின் மையக்கருத்து என்ன?
6. பூமியின் நூலகங்களில் இருக்கின்ற எழுதப்பட்ட எல்லாப் புத்தகங்களிலும் எந்தப் புத்தகம் அதிகமான செல்வாக்குடையதாய் இருக்கின்றது?
7. வேதாகமத்தை வாசிப்பவருக்கு அது தருகின்ற ஆறுதல் என்ன?
8. வேதாகமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்ட வார்த்தை என்பதை நிரூபிக்கும் அதன் ஏழு அதிசயங்களை குறிப்பிடுக.